செ.வெ.எண்.34 நாள் : 15.03.2019

**அரியலூர் மாவட்டத்தில், வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2019 அமலுக்கு வந்ததையொட்டி, வழிகாட்டுதலின்படி, 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனம் மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு குறும்படங்களை கிராமங்கள்தோறும் ஒளிப்பரப்படப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

**இந்த நிகழ்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், பல்வேறு நிகழ்ச்சிகள் மாவட்டம் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. வாக்களிப்பதின் அவசியம் குறித்தும், வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதை உறுதிசெய்யும் வகையிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டத்திலுள்ள கல்லூரிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதின் நோக்கில், வாக்காளர் வாக்களிப்பதின் அவசியம் குறித்தும், வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதை உறுதிசெய்யும் வகையிலும், மாணவ, மாணவியர்களைக் கொண்டு பேச்சு, கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனம் மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இன்றைய தினம் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. வருகின்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2019 அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குப்பதிவினை உறுதிசெய்யும் இயந்திரம் (VVPAT) பயன்படுத்தப்படவுள்ள இந்த இயந்திரம் குறித்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் நம்பகதன்மை உறுதிபடுத்தும் வகையிலும், செயல்முறை விளக்கங்களும் காண்பிக்கப்பட்டது. பொதுமக்கள் தேர்தல்கள் மற்றும் வாக்காளர் பட்டியல் தொடர்பான சந்தேகங்களை தீர்த்துக்கொள்வதற்காகவும், கருத்துக்களை தெரிவிப்பதற்காகவும் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி சேவை இயங்குகிறது.

இச்சேவை மையம் காலை 09.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை இயங்கும். பொதுமக்கள் தங்களது கருத்துக்கள் மற்றும் சந்தேகங்கள் புகார்களுக்காக இந்த மையத்தை தொடர்பு கொள்ளலாம். 27. சிதம்பரம் (தனி) நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவினையும், 100 சதவீதம் வாக்குப்பதிவு என்ற நோக்கத்தினையும் செயல்படுத்துவதற்காக மாவட்டத்தில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பொதுமக்கள் கருத்தில் கொண்டு 100 சதவீதம் வாக்களித்து, தங்களது வாக்குரிமையை நிலைநாட்ட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் பொற்கொடி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பரிதாபானு, மாவட்ட வழங்கல் அலுவலர் இரவிச்சந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா.ஜெயஅருள்பதி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் க.சரவணன், அ.எழிலரசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**